காலிங்கராயன் வாய்க்கால்

எங்களிடம் பேப்பர், களிமண்,
பிளாஸ்டர் ஆஃப் பேரிஸினால்
தயாரிக்கப்பட்ட தீரன் சின்னமலை,
காலிங்கராயன் சிலைகள்
மற்றும் அனைத்து விதமான
சிலைகள் 1 அடி முதல் கிடைக்கும்.



**தீரன்சின்னமலை, காலிங்கராயன் ஆகியோர்களை
பற்றிய வரலாற்று புத்தகங்கள் கொங்கு சீர் சடங்குகள்,
கொங்கு கலாச்சாரம் உள்ள புத்தகங்கள் கிடைக்கும்.**

**ஆர்டரின் பேரில் அனைத்து ரக
சிலைகள் தயார் செய்து தரப்படும்.**

ஸ்ரீ விநாயகா கைவினை தொழிலகம்

மனோகர் டிராவல்ஸ் வளாகம்,
2/176, பெரியண்ணன் வீதி, ஈரோடு-638001.
செல் : 88834 77661, 96881 81383

கொங்கு சொந்தங்களே! உங்கள் இல்லத் திருமணங்களை

அருமைப்பெரியவரை வைத்தும்,
சீர்செய்தும், தெய்வீகமாகவும் நடத்துங்கள்..

எழுதிங்கள் சீர் செய்துகொள்ளுங்கள்

அருமைப் பெரியவர், கயிலை சித்தர்

வி.மனோகரக்கவுண்டர்

மனோகர் டிராவல்ஸ், 2/176, பெரியண்ணன் வீதி,
ஈரோடு-638001. **செல் : 96881 81383**

காலிங்கராயன் வாய்க்கால்

ஆசிரியர்
புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தலைவர்
கல்வெட்டு - தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு
அருமைப்பெரியவர் வி. மனோகரக்கவுண்டர்
மனோகர் டிராவல்ஸ்,
2/176, பெரியண்ண வீதி,
கலைமகள் ஆரம்பப்பள்ளி ரோடு, ஈரோடு-638001.

நூற்குறிப்பு

நூலின் பெயர்	:	காலிங்கராயன் வாய்க்கால்
நூல் பொருள்	:	வரலாறு
ஆசிரியர்	:	புலவர் செ. இராசு, எம்.ஏ., பிஎச்.டி.,
மொழி	:	தமிழ்
நூல் உரிமை	:	வெளியீட்டாளருக்கு
முதற் பதிப்பு	:	2016
நூலின் அளவு	:	82 செ.மீ x 12 செ.மீ
பக்கங்கள்	:	64
அச்சு எழுத்து	:	13 புள்ளி
நன்கொடை	:	ரூ. 15/-
நூல் கிடைக்குமிடம்	:	மனோகர் டிராவல்ஸ், 2/176, பெரியண்ணன் வீதி, கலைமகள் ஆரம்ப பள்ளி ரோடு, ஈரோடு - 638 001. செல் : 96881 81383
நூல் & அட்டை வடிவமைப்பு	:	ஸ்ரீ காயத்ரி பிரிண்டர்ஸ், ஈரோடு.

அணிந்துரை

உணவுப் பொருளை விளைவித்து உயிரைக் காக்கும் பெருமக்கள் பணிக்காக எவர் நிலத்தொடு நீரைச்சேர்க்கும் முயற்சியை மேற்கொள்கிறாரோ அவர் புகழ்தான் உலகில் என்றும் சங்க இலக்கிம் புறநானூறு கூறுகிறது. அவ்வகையில் கல்லணை கட்டிய கரிகாலன் புகழ்போல கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பவானியாற்றைத் தடுத்து அணை கட்டி 56½ மைல் தூரம் வாய்க்கால் வெட்டி சாமை விளைந்த இடம் எல்லாம் சம்பா விளையச்செய்த காலிங்கராயன் புகழும் நிலைத்து நிற்கிறது.

பாண்டியர் படைத் தலைவராகவும், மத்தியமைச்சராகவும் விளங்கிய காலிங்கராயன் பாண்டியர் சார்பில் கொங்கு நாட்டை நிர்வாகம் செய்தபோது மக்கள் நலம் காக்கச் செய்த பணிகள் பலப்பல. அவற்றுள் தலையாயது அணை வாய்க்கால் பணியாகும். வாய்க்கால் மூலம் பவானி, நொய்யல், அமராவதி நதியை இணைக்க முயன்ற காலிங்கராயன் நதிகள் இணைப்பின் முன்னோடி

ஆவார். தான் செய்த அணை வாய்க்கால் பயனை என்றும் தன் சந்ததியார்கள் எவரும் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையிட்ட பெருந்தகை வள்ளல் காலிங்கராயன் ஆகும்.

இப்பணியைப் புலவர்களும், ஆட்சியாளர்களும் நீரியல் உலக நிபுணர்களும் பலபடப் பாராட்டியுள்ளனர். மக்கள் காலிங்கராயனைத் தெய்வமாகப் போற்றிப் பரவியுள்ளனர். காலிங்கராயன் வரலாறு என்னால் 1963ம் ஆய்வு செய்யத் தொடங்கி 1987ல் நூல் வடிவம் பெற்றது. அந்நூல் பல பதிப்புகள் கண்டாலும் அவரது வரலாறு மக்களிடம் முழுமையாகச் சென்றடையவில்லை.

அந்தக் குறையைப் போக்கி மக்கள் அனைவரிடமும் காலிங்கராயன் வரலாறு சென்றடைய வேண்டும். என்ற உயரிய நோக்கத்தோடு வெளியிடப்பெற்றதே இந்த நூலாகும். நூல் சிறிதாயினும் காலிங்கராயன் வரலாற்றுச் செய்திகள் முழுவதும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

இச்சீரிய வரலாற்றுப் பணியை மேற்கொண்டு வெற்றிகரமாகச் செய்துமுடித்தவர்கள் அருமைப்பெரியவர் திரு.வி.மனோகரக்கவுண்டர் அவர்கள். தூரன்குலச் செம்மலான அவர்கள் கொங்குச் சமுதாய ஆர்வலர், கொங்குப் பண்பாடும், பழக்க வழக்கமும் அழியாது நின்று நிலைக்க வேண்டும் என்பதில் பேரார்வம் உடையவர்கள். அவரது பன்முகச் சமுதாயப் பணிகளைப் பாராட்டிச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு கொங்கு சாதனையாளர் விருது 2015ஆம் ஆண்டு அளித்துப் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்பு நூல் பணியுடன் காலிங்கராயனின் 1½ அடி உயரத் திருவுருவச் சிலையை அவர் உருவாக்கியிருப்பதும், தேவையுள்ள அன்பர்கட்கு வழங்க இருப்பதும் பாராட்டுதற்கு உரியதாகும்.

காலிங்கராயன் அணையை வாய்க்கால் பணிகள் முடிவுற்ற நாள் தை மாதம் 5ந் தேதி ஆகும். அந்நாளில் காலிங்கராயனின் தன்னலமற்ற நற்பணிகளைப் போற்றி வழிபட அவர் வேண்டுகோள்

விடுத்திருப்பது பாராட்டுதற்கு உரியது.

தமிழக அரசு காலிங்கராயன் அணையில் அவர் நினைவு மணிமண்டபமும், திருவுருவச் சிலையும் அமைக்க முடிவு செய்துள்ள இத்தருணத்தில் இந்நூல் வெளிபடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

காலிங்கராயன் மீது பற்றும், கொங்குச் சமுதாய ஆர்வமும் உடைய அன்பர்கள் இந்நூலை மறுபதிப்புச் செய்து கொங்கு நாடெங்கும் அவர் புகழ் பரவச் செய்ய வேண்டும் என்பதும் அருமைப்பெரியவர் மனோகரக்கவுண்டர் அவர்கள் விருப்பமாகும். இப்பணிக்கு உதவ அவர் ஆயத்தமாக உள்ளார்.

மனோகர் டிராவல்ஸ் மூலம் ஆன்மீக வழிகாட்டியாக உள்ள அருமைப்பெரியவர் வி.மனோகரக் கவுண்டர் அவர்களின் வரலாற்று வழிகாட்டியாக உள்ள நற்பணியை மிகவும் பாராட்டி மகிழ்கிறேன்.

வாழ்க வளர்க அவர்தம் சீரிய பணிகள்

வாழ்த்தி மகிழும்

புலவர் செ.இராசு எம்.ஏ., பிஎச்.டி.,

ஈரோடு
02.01.16

அருமைப்பெரியவரின் உரை

கொங்கு சொந்தங்களே, வணக்கம்,

23.01.2015ம் தேதி ஈரோடு அருகிலுள்ள பஞ்சலிங்கபுரத்தில் திருமணம் நிச்சயம் செய்வதற்காக சென்றிருந்தேன். அங்கு காலிங்கராயன் பாசன விவசாய சங்கத்தினரைப் பார்த்து பேசினேன். காலிங்கராயன், அணையை நாட்டுக்கு அர்ப்பணித்த தை மாதம் 5ஆம் தேதி காலிங்கராயன் வாய்க்காலில் முளைப்பாரி விட்டும், பூச்சொரிந்தும் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதை என்னிடம் சொன்னார்கள்.

காலிங்கராயன் இல்லையென்றால் எங்கள் பகுதிக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட கிடைத்திருக்காது என்றும் சொன்னார்கள், இது என்னுடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தப் பகுதிகளில் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் அணை கட்டியதன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்த காலிங்கராயனைப் பற்றியும், காலிங்கராயன் வாய்க்காலைப் பற்றியும் முழுமையாக தெரிந்து கொள்ள விரும்பினேன். புலவர் இராசு அவர்களிடம் நேரில் சென்று அவர் எழுதி வெளியிட்ட காலிங்கராயன் பற்றிய புத்தகத்தை வாங்கி படித்தேன். எத்தனை

அற்புதங்கள், எப்படிப்பட்ட தியாகம், எப்படிப்பட்ட உழைப்பு, தன் உடல் நலம் பாராமல் உறங்காமல், ஓய்வெடுக்காமல் அணைகட்டிய விதமும், வாய்க்காலை எந்த வழியாக எப்படி கொண்டு போக வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுத்திய விதமும் படித்து வியந்தேன். முல்லைப்பெரியாறு அணை கட்டிய பென்குவிக் மற்றும் வேறு பொறியியல் வல்லுனர்கள் அவர்களது அணைகளை கட்டுவதற்கு முன் காலிங்கராயன் அணையைப் பார்த்துதான் கட்டினார்கள் என்கிற வரலாறு எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

காலிங்கராயன் அணையிலிருந்து வாய்க்கால் சென்று முடியும் வரை உள்ள பகுதிகளில் உள்ள அனைவரிடத்திலும் காலிங்கராயனைப் பற்றிய புத்தகம் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். குறைந்த பட்சம் ஒரு லட்சம் புத்தகங்களை அச்சடித்து கொடுக்க விரும்பினேன். இதுபற்றி புலவர் இராசு அவர்களிடம் சொன்னபோது பழத்தின் சாறு பிழிந்து கொடுப்பது போல அவர் எழுதிய புத்தகத்திலிருந்து முக்கியமான செய்திகளை தொகுத்து கொடுத்துள்ளார். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

அருமைப்பெரியவர்
கயிலைச்சித்தர்
V.மனோகரக் கவுண்டர்

நலமுடன் வாழ்க

வளமுடன் வாழ்க

பலமுடன் வாழ்க

காலிங்கராயன் வாய்க்கால்

தமிழ்நாட்டில் சேர சோழ பாண்டிய நாடுகளுடன் தொண்டை நாடும், கொங்கு நாடும் சேர்த்து தமிழ்நாடு ஐந்து என்று கருதும் வழக்கம் முன்பு இருந்தது. சங்க காலத்தில் கொங்குநாடு தனி நாடாகக் கருதப்பட்டது. நிருவாக வசதிக்காக இக்கொங்கு நாட்டை 24 நாடுகளாகப் பிரித்தனர்.

காலிங்கராயன் வெட்டிய வரலாற்றுப் புகழ் பெற்ற காலிங்கராயன் கால்வாய் பெரும்பகுதி மேல்கரைப் பூந்துறை நாட்டிலும், சிறுபகுதி மேல்கரை அரைய நாட்டிலும் பாய்கிறது.

புகழ் தங்கும் பூந்துறை நாடு கொங்கின் 24 நாடுகளிலே முதன்மையான நாடு. கிழக்கே காவிரியாறு, தெற்கே காஞ்சி எனப்படும் நொய்யலாறு, மேற்கே சென்னிமலை, வடக்கே வானி எனப்படும் பவானியாறு இவ்வெல்லைக்குட்பட்ட 32 பழம்பெரும் ஊர்களைத் தன்னகத்தே கொண்டது பூந்துறை நாடு.

காலிங்கராயனால் சிறப்புடைச் செம்மலைப் பெற்றதால் பெரும் புகழ் பெற்ற வெள்ளோடு இப்பூந்துறை நாட்டில் உள்ள ஊர்கள் முப்பத்திரண்டனுள் ஒன்று. இதுவே பூந்துறை நாட்டின் இரண்டாவது தலைநகரமாகவும், காலிங்கராயன் வீற்றிருந்த கோ நகரமாகவும் விளங்கிய சிறப்பினை உடையது. காலிங்கராயனைப் "பூந்துறை நாட்டுக்கு நாட்டான்" என்று குறிப்பிடும் வமிசாவளி, அவனை "வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரன்" என்றும் பல இடங்களில் குறிக்கின்றது.

காலிங்கராயன் காலத்திற்குப் பின்னர் இவ்வூர் காலிங்கராய வெள்ளோடு என்று குறிப்பிடப் பெறுவதால் காலிங்கராயனால் இவ்வூர் பெற்ற பெருமையை நன்கறியலாம்.

இந்தியாவின் ஆளும் தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும் என்னும் ஆங்கில வரலாற்று நூல் அவரைச் சாத்தந்தை காலிங்கராயர் என்று குறிப்பிடுகிறது. சாத்தந்தை, என்ற குலப் பெயருடன் அவர் பெயர் இணைந்து வழங்கப்

பெற்றமை தெரிகிறது. அண்மையில் கிடைத்த ஓலைப்பட்டயம் ஒன்றின் மூலம் காலிங்கராயனின் தந்தை பெயர் நஞ்சய்யன் என்றும் காலிங்கராயனின் இயற்பெயர் லிங்கய்யன் என்றும் தெரிகிறது. "தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சியார் தேவஸ்தானம் ஜீரணோத்தாரணம் பண்ணிக்கொண்டு இருந்தான்" என்று வம்சாவளி கூறுவதால் சிறந்த சிவபக்தன் என்றும் வெள்ளோடு சர்வலிங்கேசுவரரை வழிபாடு தெய்வமாக வழிபட்டு வந்தார் என்றும், தனியாகக் கோயில் திருப்பணி செய்யும் அளவிற்கு மிகுந்த செல்வமுடையவர் என்றும் அறிகின்றோம்.

சோர்வில்லாத முயற்சியும் அயராத உழைப்பும் அனைவர் மீதும் பற்றிப் படரும் அன்பும் தடைக்கு அஞ்சாத ஆற்றலும் கொண்டு விளங்கியவர் காலிங்கராயர். காவிரியை ஒட்டியுள்ள மேடு பள்ளமான இடத்தில் மிகுந்த பொறியியல் திறத்துடன் நிலத்தை நன்கு அளந்து திட்டமிட்டு ஆராய்ந்து கால்வாயை வெட்டியுள்ளார். கணிதம், பூகோளம்

போன்ற கலைகளில் காலிங்கராயன் மிகவும் வல்லவராகத் திகழ்ந்திருக்க வேண்டும். பொறியியல் கலையில் மிகவும் மேலோங்கிய ஆற்றலையும் அறிவையும் காலிங்கராயர் பெற்றிருக்க வேண்டும்.

காலிங்கராயன் அணைகட்டின பட்டயத்தில் "கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணை கட்ட வேணுமென்று" என்ற தொடர் வருகிறது. கனகபுரம் விநாயகர் கோயிலில் "காலிங்கராயன் வங்கிஷத்தில் காசிலிங்க கவுண்டன் உபயம்" என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது. எனவே காலிங்கராயர் கனகபுரத்தைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுகிறது.

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் கொங்குப் பகுதியில் சடையவர்மன் வீரபாண்டியன் என்பவன் ஆட்சியாளன் ஆனான்.

பாண்டியன் படையில் வெள்ளோட்டைச் சேர்ந்த காலிங்கராயன் சேர்ந்து மதுரை சென்றான். விரைவில் தன் அறிவு ஆற்றலால் பாண்டியன் படைக்குத் தலைமை பூண்டான். பாண்டியனுக்கு

அறிவுரை கூறும் தலைமை அமைச்சனாகவும் ஆனான். சடையவர்மன் வீரபாண்டியனும் கி.பி.1265 ஆம் ஆண்டு அவ்வீரனைப் பாராட்டிக் காலிங்கராயன் என்று சீர்மிகும் சிறப்புப் பட்டப்பெயரும் அளித்தான்.

ஏறக்குறைய தன் 30 ஆம் வயதில் ஆட்சி அலுவலில் சேர்ந்த காலிங்கராயன் சுமார் கி.பி.1265 ஆம் ஆண்டு பாண்டிய நாட்டின் வடக்குப் பகுதியாகிய கொங்கு நாட்டிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். உத்தர மந்திரி, உத்தர ராயன், சுந்தர பாண்டிய காலிங்கராயன் என்ற சிறப்புப் பட்டப் பெயர்களும் பெற்றமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன் என்ற மூன்று பாண்டிய அரசர்கள் காலத்தில் சுமார் 40 ஆண்டுகள் அரசியல் தலைவராக விளங்கிப் பெருமைகள் பெற்றவர் நம் காலிங்கராயன்.

லிங்கையன் என்பது காலிங்கராயனின் இயற்பெயர் என்பதால் அப்பெயரை ஒட்டியே

பட்டப்பெயர் காலிங்கராயன் என்று வழங்கப் பெற்றிருக்கலாம் என்றும் கருதலாம். தமிழரசர்கள் பெற்ற கலிங்க வெற்றியின் அடையாளமாகவே காலிங்கராயன் என்ற பட்டப் பெயர் வழங்கப்பட்டது. காளிங்கராயன் என்று எழுதுவது பிழை.

பாண்டியர் ஆட்சி கொங்கு நாட்டில் பரவியிருந்தது என்பதாலும் காலிங்கராயன் என்ற பட்டம் அளிக்கும் வழக்கம் கி.பி.12 ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடர்ந்து உள்ளது என்பதாலும் காலிங்கராயன் என்ற பெயரே அரசன் அளித்த பட்டப்பெயராக நம் தலைவனுக்குள்ளமை விளங்கும்.

அணைகட்டிக் கால்வாய் வெட்டும் முயற்சியில் காலிங்கராயன் சோர்வுற்றிருக்கும் போது அவர் தாயார் மகனுக்குத் தைரியமூட்டிப் பணியில் ஈடுபடுத்தினார் என்பது செவிவழிச் செய்தியாகும்.

மகனே நம் வீட்டில் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. தயிர் விற்ற பணம் தாவாரம் வரை கிடக்கிறது. மோர் விற்ற பணம் முகடுவரை உள்ளது. அவைகளை எடுத்துக் கொண்டு சென்று தைரியமாக

அணையைக்கட்டு; கால்வாயை வெட்டு என்று காலிங்கராயன் தாயார் கூறினார்களாம்.

காலிங்கராயன் ஆட்சிப்பகுதியில் காலிங்கராய வினியோகம் என்ற வரி வாங்கப்பட்டதைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவை காலிங்கராயன் செய்த பணிகட்காக வசூலிக்கப்பட்ட வரி என்று தி.நா.சுப்பிரமணியம் கூறுகிறார்.

கொங்கு நாட்டில் பூந்துறை நாட்டுக்கு உரியவனாய் வெள்ளோட்டை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த காலிங்கராயன் பாண்டியர்களின் ஆட்சிப் பிரதிநிதியாகக் கொங்கு நாடு முழுவதையுமே ஆண்டு கொண்டிருந்த கொங்குப் பாண்டியரின் கீழ் அரசியல் அதிகாரியாக விளங்கினார் என்று அவர் கல்வெட்டுகள் வாயிலாக அறிகின்றோம்.

வெஞ்சமாங்கூடல், நெரூர், கொடுமுடி, வெள்ளோடு, இராமநாதபுரம் புதூர், அந்தியூர், திங்களூர், குன்னத்தூர், விசயமங்கலம், சர்க்கார் பெரியபாளையம், எலத்தூர், குடிமங்கலம், பேரூர், கரூர், பாரியூர், மொடச்சூர் போன்ற பல பகுதிகளில்

காலிங்கராயனின் கல்வெட்டுகள் கிடைப்பதால் ஏறத்தாழ அமராவதி ஆற்றுக்கு வடக்கும் காவிரிக்கும் மேற்கும் பேரூரின் கிழக்கும் கோபி, அந்தியூரின் தெற்கும் இவைகளின் மத்தியப்பரப்பில் உள்ள கொங்கு நாட்டுப் பகுதி முழுவதையும் காலிங்கராயன் தன் அதிகார எல்லைக்குட்படுத்தியிருந்தார் என்று தெரியவருகிறது.

உணவு கொடுத்தவர்கள் உயிரையே கொடுத்தவர்கள் ஆகிறார்கள். உணவு நிலத்தொடு நீர் சேர்வதால் உண்டாவது. எனவே நிலத்தொடு நீர் சென்றடையும் பணியை யார் செய்கிறார்களோ அவர்களே உடம்பையும் உயிரையும் காப்பவர்கள் ஆகின்றார்கள். புறநானூற்றுப் பாடல் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடுகின்றார்.

காலிங்கராயன் பாண்டியர் தலைவர் ஆனபின் தம்முடைய பூந்துறைநாடு வளம் பெறும் பொருட்டுப் பவானியில் இடம் தேர்ந்து, நாட்டு மக்கள் உதவியுடன் காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாயையும்

வெட்டினார்.

பவானிக்கு அருகிலுள்ள ஊராட்சிக் கோட்டை மலையை விலைக்கு வாங்கினார். அம்மலையிலிருந்து அணை கட்டுமிடம் வரை உள்ள வழியையும் விலைக்கு வாங்கினார். இதனை மெய்ப்பிக்கும் அடையாளமாக "மலையாயிரம் தடம் ஆயிரம்" என்ற பழமொழி ஒன்று ஊராட்சிக் கோட்டைப் பகுதியில் இன்றும் வழங்குகின்றது.

அம்மலையில் கற்களை உடைத்து அவைகளைப் பல எருமை வண்டிகளின் மூலமாக அணை கட்டும் பகுதிக்கு எடுத்துக்கொண்டு வந்து அணையைக் கட்டினார். காலிங்கராயனும் இரண்டு எருமைக் கடாக்கள் பூட்டிய வண்டியில் கல் எடுத்தாராம். அக் கடாக்களுக்கு இராமன்–இலட்சுமணன் என்று பெயர் வைத்திருந்தார் என்பர்.

மலையிலிருந்து அணைவரை வரும் வழியில் பல இடங்களில் தளர்ச்சி நீங்கத் தங்குமிடங்களையும் தாகந்தணிக்க நீர் நிலைகளையும் ஏற்படுத்தினார். வழியில் பொரி, கடலை போன்ற தின்பண்டங்களும்

ஏராளமாக வைக்கப்பட்டு இருக்குமாம். வேலையாட்கள் அவைகளைத் தின்றுகொண்டே வேலை செய்யலாமாம். ஊராட்சிக் கோட்டை மலையில் காலிங்கராயன் மோர் குடித்த இடம், உணவு உண்ட இடம் என்று சில இடங்களை இன்றும் காட்டுகின்றனர். ஆனால் அவைகளைப் பற்றிய கல்வெட்டோ சான்றோ ஒன்றும் அங்கில்லை. முன்பு காலிங்கராயர் குடும்பத்தின் தனிப்பட்ட உடைமையாக ஊராட்சிக் கோட்டை மலை திகழ்ந்தது.

அணையில் நீர் வழிந்து வரும் கலிங்கில் கற்களை இணைத்து அந்த இணைப்பு நிலையாக நிற்கக் கம்பிகளைக் கொடுத்து ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி அதனை இணைத்துள்ளார். அணைத் தோப்பின் கிழக்கில் நீர் பாய்ந்து நேராகக் காவிரியில் கலந்து விடாமல் தண்ணீர் அணைக்கு வந்து சேர மிக நீளமான தடுப்புச் சுவரை ஆற்றின் இடையில் கட்டியுள்ளார். அதனால் நீர் தடுக்கப்பட்டு அணையை நோக்கிப் பாய்கிறது. நீர் மிகுதியாக வரும் காலங்களில் தான் அணைத்தோப்பின் கிழக்குப்

பகுதியில் பவானியாற்றில் தண்ணீர் வரும். இந்தப் பகுதிக்கு முரியான் அணை என்று பெயர்.

கி.பி.1265இல் வீரபாண்டியனிடம் அரசியல் அலுவலராக அமர்ந்த காலிங்கராயன் 12 ஆண்டுக் காலம் முயன்று கி.பி.1270ஆம் ஆண்டு தொடங்கி கி.பி.1282ஆம் ஆண்டு பணியை முடித்தார் என்று நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. ஜமீன் ஊத்துக்குளி அகத்தூரம்மன் கோயில் கல்வெட்டில் சாலிவாகன சகாப்தம் 1203 கலியுக சகாப்தம் 4382 விய வருசம் தை மாதம் 5ஆம் தேதி அணை கட்டி முடித்ததாகக் கூறப்படுகிறது. அதன் நேரான ஆங்கில ஆண்டு கி.பி.1282 ஆகும். தை5 காலிங்கராயன் நாள் ஆகும்.

“காலிங்கராயன் ஒரு செல்வந்தராகவும் செல்வாக்குப் பெற்றவராகவும் இருந்த காரணத்தினால் தன் சாதி மக்களிடமிருந்து கால்வாயின் தேவைக்கான பணத்தைத் திரட்டினார்.” என்று புக்கானன் கூறுகின்றார். இச்செய்தியையும் காலிங்கராயன் வினியோகம் என்ற வரியையும்

நோக்க இது உண்மைச் செய்தியாக இருக்கலாம் என்று கொள்ளுதல் வேண்டும்.

காலிங்கராயன் அணை கட்டி முடிக்க ஆன 12 ஆண்டுகளும் சபதம் செய்து அது முடியும் வரை தாடி வைத்துக் கொண்டிருந்தார்.

அணை, கால்வாய் வேலைகள் முடிந்தவுடன் காலிங்கராயன் மிகுந்த சோர்வினால் படுத்து உறங்கிவிட்டார். அப்பொழுது குடும்ப நாவிதன் வந்து அவர் உறக்கம் கெடாத வகையில் தாடியை மழித்து எடுத்து விட்டான். காலிங்கராயன் விழித்து எழுந்தவுடன் மகிழ்ந்து நாவிதனைப் பார்த்து உன்னைப் பாராட்டுகின்றேன்; உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அப்போது தன் பெயர் நின்று நிலவ ஏதேனும் செய்ய வேண்டும் என்று நாவிதன் இறைஞ்சினான். காலிங்கராயன் மகிழ்ந்து காலிங்கராயன் கால்வாயின் முதல் கரையை நாவிதன் கரையென்று நாவினிக்க அழைத்தார். தன் பெயரிட்ட காலிங்கராயன் பாளையம் என்ற ஊருக்கு அருகில் நாவிதன்பாளையம் என்ற ஊருண்டாக்கிச்

சருவமானியமாக அளித்தார்.

காலிங்கராயர் தவமிருந்து அணை கட்டிக் கால்வாய் வெட்டினார் என்று சென்னிமலை யாண்டவர் பிள்ளைத் தமிழ் கூறுகிறது.

"சீரில் பொலியும் தவமிருந்து
தெய் வானி அணைதேக்கி"

என்பது அப்பாடல் பகுதியாகும்.

நாட்டுப்பாடல், பவானி வானிலிங்கேசுவரர் வேதநாயகி இருவரும் வரம் அருளக் காலிங்கராயர் இத்திருப்பணியை முடித்தார் என்று கூறுகிறது.

"வானிலிங் கேசுரர் வேத நாயகியம்மை
வந்துமுன் சாட்சி செய்ய
வாய்த்துபுகழ் சாத்தந்தை காலிங்ராயர்அணை
வரத்தினால் கட்டி வைத்தார்."

என்பது ஒரு பாடல் பகுதியாகும்.

காலிங்கராயன் கால்வாயைப் பல இடங்களில் கோண வாய்க்கால் என்று அழைக்கின்றனர். கோணல் கோணலாகக் கால்வாய் இருப்பதே

அதற்குக் காரணம். ஈரோட்டில் காரை வாய்க்கால் என்று அழைக்கின்றனர். ஈரோட்டில் வாய்க்காலின் கிழே பெரும்பள்ளம் செல்லுகிறது; மேலே காலிங்கராயன் கால்வாய் செல்லுகிறது. நீர் கசியாமல் இருக்கக் கால்வாய் காரையால் கட்டப்பட்டிருக்கிறது. எனவே காரைவாய்க்கால் என்று அழைக்கின்றனர். இன்னும் பல இடங்களில் பவானி வாய்க்கால் என்றும், சிறியதாக இருப்பதால் சின்ன வாய்க்கால் என்றும், புதிதாகக் கீழ்பவானி வாய்க்கால் வெட்டப்பட்டிருப்பதால் காலிங்கராயன் கால்வாயைப் பழைய வாய்க்கால் என்றும் பல இடங்களில் பல பெயர்களால் அழைக்கின்றனர்.

பவானி அணை கடல் மட்டத்திலிருந்து 534 அடி உயரம், நொய்யலாற்றில் காலிங்கராயன் கால்வாய் கலக்குமிடம் கடல் மட்டத்திலிருந்து 412.48 அடி உயரம். நேராகப் பவானிக்கும் நொய்யலுக்கும் இடையில் உள்ள தூரம் 32 மைல். ஆனால் வளைந்து செல்லுவதால் கால்வாயின் நீளம் 561/2 மைல் ஆகிறது. காலிங்கராயன் கால்வாய்

பவானியிலிருந்து நேராக நொய்யல் வரை செல்லுமானால் வயலுக்குத் தண்ணீர் பாயாமல் நேராக விரைந்து ஓடி நொய்யலில் கலந்து விடும். எனவே தான் நீர் தேங்கி நின்று வயலுக்குப் பாய்ந்து வளப்படுத்துவதற்காகவும், நீரின் வேகத்தைக் குறைத்துக் கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்காகவும் கால்வாய் வளைந்து மேட்டுப்பாங்கான இடத்திலேயே தொடர்ந்து செல்லுகிறது. இது காலிங்கராயனின் பொறியியல் திறத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.

திருப்பாண்டிக் கொடுமுடிக்குத் தெற்கே காலிங்கராயன் கால்வாயின் அளவு சுருங்கியுள்ளது. வெங்கமேடு அருகில் உள்ள நாகமநாயக்கன் பாளையத்தில் மிகச் சுருங்கிக் கழிவுநீர்க் கால்வாய் போல மாறித் தென்கிழக்கில் உள்ள ஆவுடையா பாறை என்னும் ஊரை நோக்கிச் செல்லுகிறது காலிங்கராயன் கால்வாய். ஆவுடையாபாறையில் புகைவண்டிப் பாதையை ஒரு சிறு பாலத்தின் மூலம் கடந்து தெற்கு நோக்கி ஓடி நொய்யலாற்றில்

கலக்கின்றது. (இந்த இடத்தின் எதிர்க்கரையில் செல்லாண்டியம்மன் கோயில் இருக்கிறது.) காலிங்கராயன் நொய்யலோடு கலக்கும் இந்த இடத்தைப் பொது மக்கள் கூடுதுறை, கூட்டாற்று மூலை என அழைக்கின்றனர்.

கிளைக் கால்வாய்கள்

மலையம்பாளையம் பிரிவு வாய்க்கால் :

காலிங்கராயன் கால்வாயில் 31.6.430 மைலில் பழனிக்கவுண்டம்பாளையம் அருகே பிரிந்து சுமார் 4 மைல் தூரம் காலிங்கராயன் கால்வாய்க்கு இணையாகவே ஓடி மலையம்பாளையம் அருகே காலிங்கராயன் கால்வாயுடனே கலக்கிறது. இக்கால்வாய் 675 ஏக்கர் நிலங்களை வளப்படுத்துகிறது.

பெரியபட்டம் பரிசோதனை வாய்க்கால்

நாகமநாயக்கன் பாளையத்தில் காலிங்கராயன் கால்வாய் நொய்யலில் கலப்பதற்காக ஆவுடையா பாறையை நோக்கிப் பாயுமிடத்தில் ஒரு தடுப்பை ஏற்படுத்தி அங்கிருந்து ஒரு கால்வாயைத்

தென்மேற்காகக் கொண்டு செல்லுகின்றனர். அது பெரியபட்டம் என்ற ஊரைக் கடந்து செட்டியுள்ளாபாளையம் என்ற ஊரில் நொய்யலோடு கலக்கிறது. அதற்கும் காலிங்கராயன் கால்வாய் என்றே பெயர் கூறி அழைக்கின்றனர்.

ஆவுடையாபாறை பிரிவு வாய்க்கால்

ஆவுடையாபாறையில் காலிங்கராயன் கால்வாய் நொய்யலோடு கலக்குமிடத்திற்கு அருகில் மைல் 56.5.234 இல் கால்வாயை ஒரு கலிங்கின் மூலமாகத் தடுத்துத் தண்ணீரை மேற்கு நோக்கிக் கொண்டு செல்லுகின்றனர். அதற்கும் காலிங்கராயன் கால்வாய் என்றே பெயர் கூறுகின்றனர்.

பிற்காலத் திருப்பணி செய்த இருவர்; வட்டக்கல் வலசு சின்னத்தம்பிக் கவுண்டர்

சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்னர் பெருமழை பெய்து வெள்ளப் பெருக்கெடுத்தது. அதன் காரணமாகப் பள்ளங்களில் ஓடிவந்த தண்ணீர் காலிங்கராயன் கால்வாயினுள் புகுந்து பல இடங்களில் கரைகள் உடைந்தன. பொதுப்பணித்

துறையினரால் விரைந்து பழுதுபார்க்க முடியாத அளவுக்கு உடைப்பு மிகுதியானதால் உழவர்கள் பெரிதும் துன்புற்றனர்.

அப்போது வட்டக்கல்வலசில் வாழ்ந்த கொங்கு வேளாளரில் கண்ண குலத்து நிலக்கிழாரான சின்னத்தம்பிக் கவுண்டர் அவர்கள் பெரும்பகுதிக் கால்வாய்க் கரைகளை அடைக்கத் திட்டமிட்டார். தம் திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துரைத்தார். வட்டக்கல்வலசுச் சின்னதம்பிக் கவுண்டரின் நுண்ணறிவையும் விடா முயற்சியையும் கண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் சின்னதம்பிக் கவுண்டருக்கு உதவி புரிந்தார். எங்கு வேண்டுமானாலும் சின்னத்தம்பிக் கவுண்டர் எவ்வளவு மரங்களை வேண்டுமானாலும் வெட்டிக் கொள்ளலாம். பாறைகளை உடைக்கலாம். மண் எடுக்கலாம். யாரையும் உதவிக்கு அழைத்துக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தார்.

தம் செல்வத்தாலும், செல்வாக்கினாலும், ஆட்களைத் திரட்டி அரிய முயற்சியால் சின்னத்தம்பிக்

கவுண்டர் கால்வாய்க்கரைகளைப் பழுது பார்த்துக் கட்டினார். கால்வாய் முன்பு போலவே நன்றாக அமைந்து தண்ணீர் வந்தது. உழவர்கள் மகிழ்ந்தனர்.

மணியம் காளியப்ப கவுண்டர்

சுமார் 120 ஆண்டுகட்கு முன்பு மணியம் காளியப்ப கவுண்டர் என்பவர் ஆவுடைபாறை அருகே தண்ணீர் வீணாகச் சென்று நொய்யலில் கலப்பதைக் கண்டு வருந்தி ஆவுடையாபாறை அருகிலிருந்து கிளைக்கால்வாய் ஒன்றமைத்துப் பாசனத்திட்டம் ஒன்றை அளித்தார். அவரே முன்னின்று அந்தச் செயலை முடித்தார். இன்று அவர் அமைத்த திட்டம் நன்கு செயல்பட்டுப் பலநூறு ஏக்கர்கள் பாசனம் பெறுகின்றன. பெரியபட்டம் பரிசோதனைக் கால்வாய் என்பது இதன் பெயராகும்.

காலிங்கராயன் பவானியாற்றில் கட்டிய மற்றொரு அணை

டணாயக்கன் கோட்டைப் பகுதியில் ஊருக்குச் சற்று மேற்கே பவானி ஆற்றில் அணை ஒன்று கட்டிச் சிதைந்த நிலையிலும் 1800 வாக்கில் 400 ஏக்கர்

நிலத்திற்குப் பாய்ந்து வந்தது. புக்கானன் இதைக் குறித்துள்ளார். கீழ்பவானி அணை கட்டியபின் இந்த அணை முழுவதும் அணையினுள் மறைந்து விட்டது. 1799இல் மேக்ளியாட் இந்த அணையைப் பழுதுபார்த்தார். தூர்ந்த கால்வாயைச் செப்பனிட்டார்.

இந்த அணைக்கட்டைக் கட்டியவர் வேளாளர் லிங்கையன் என்பவர் என்று ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

நதிகள் இணைப்பின் முன்னோடி

காலிங்கராயன் கால்வாய் நீர் மிகுதியாக நொய்யலில் கலப்பதைக் கண்ட காலிங்கராயன் நொய்யலில் ஒரு அணைகட்டி ஒரு கால்வாய் மூலம் அமராவதிவரை பாசனம் பெறச் செய்ய எண்ணினார். நொய்யலில் ஒரு அணையும் கட்டப்பட்டது. இப்போது, ஓட்டை அணை என்ற பெயரில் அழைக்கப்படும் அந்த அணை உடைந்து கிடக்கிறது. நொய்யலின் தென்கரையில் விதரி அத்திப்பாளையத்திலிருந்து அமராவதி வரை வாய்க்கால் வெட்டும் முயற்சியும் நடைபெற்றது. வெட்டிய வாய்க்காலின் பகுதிகள்

அங்கு பல இடங்களில் காணப்படுகின்றன.

வெள்ளோடு பெரியண்ணன் குறவஞ்சி,

"திண்டிறல் வானியில் கண்டனை கட்டிக்
கருவூர் வரைக்கும் வரிசையாய் வாய்க்கால்
நடத்தும் உதாரன் படைக்குயர் தீரன்
தாலங்கள் புகழும் காலிங்கராயன்."

என்று காலிங்கராயனைப் புகழுகிறது.

27.3.1872ல் அளித்த திட்டம் ஒன்றில் வெட்டர்பர்ன் என்பவர் காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீரை நொய்யலில் தேக்கி அதிலிருந்து நொய்யலின் தென்கரையில் 13000 ஏக்கர் பாயும் வண்ணம் ஒரு திட்டத்தை ரூ.8,71,000 ரூபாயில் நிறைவேற்றலாம் என்று கூறியுள்ளார்.

7.11.1800இல் புக்கானன் காலிங்கராயன் விரிவுத்திட்டம் பற்றிக் கூறியுள்ளார். எனவே பவானி, நொய்யல், அமராவதி ஆகிய மூன்று நதிகளையும் இணைக்க முயன்றதன் மூலம் காலிங்கராயன் நதி இணைப்பில் இந்தியாவின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

காலிங்கராயன் வாய்க்கால்



காலிங்கராயன் கொங்கு நாட்டின் அரசியல் தலைவராகப் பூந்துறை நாட்டு வெள்ளோட்டில் வீற்றிருந்தபோது கொங்கு நாடெங்கும் பற்பல அறப்பணிகளைச் சிறப்புடன் செய்துள்ளார். குளங்கள் வெட்டுதல், பழுதான குளங்களைப் புதுப்பித்தல், கோயில் கட்டுதல், பழங்கோயில்களைப் புதுப்பித்தல், ஊர் உண்டாக்குதல், மக்களைக் குடியேற்றுதல், மக்களுக்கு உரிமைகள் அளித்தல் போன்ற பல்வேறு நயத்தகு நற்செயல்களைச் செய்துள்ளமையைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் சிறப்பித்துப் பேசுகின்றன.

வெள்ளோட்டுச் சிவன் கோயிலைக் காலிங்கராயன் திருப்பணி செய்து புதுப்பித்துக் கட்டினார் என்பதை "தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்வர பாடகவல்லி நாச்சியார் தேவஸ்தானம் சீரணோத்தாரணம் பண்ணிக் கொண்டு இருந்தான்" என்னும் பகுதியால் வமிசாவளி தெரிவிக்கின்றது.

திங்களூரில் உள்ள பெருமாள் கோயிலைக் கட்டி அதற்குச் சுந்தர பாண்டிய விண்ணகரம் என்று

காலிங்கராயன் பெயரிட்டதாய்த் திங்களூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

நாகமலை என்று சிறப்புப் பெயரையுடைய திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர்க்குக் காலிங்கராயன் பல திருப்பணிகளைச் செய்ததாகவும் கொடைகள் அளித்ததாகவும் அறிகின்றோம்.

ஊத்துக்குளியிலேயுள்ள அகத்தூர் அம்மன் ஆலயத்தைக் கட்டியவர் காலிங்கராயரே!

மக்களுக்கு உரிமைகள் அளித்தல்

கொங்கு நாட்டின் வேளாளர் வாழுமிடங்களில் கம்மாளர் எனப்படும் ஆசாரிகள் வாழ்ந்தால் கால்களுக்குச் செருப்பு அணிந்து கொண்டு செல்லக்கூடாது. வீடுகட்குச் சுண்ணாம்பு முதலிய சாந்துகள் எவையும் பூசக்கூடாது. அவர்கள் வீடுகளில் மங்கல காரியங்கள் நடந்தால் அல்லது தீய காரியங்கள் நடந்தால் வாத்தியங்கள், பேரிகை முதலிய வாசிக்கக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்துக் கட்டளையிட்டனர். ஆனால் வீரபாண்டியன் ஆட்சியின் 15ஆம் ஆட்சியாண்டான கி.பி.1280

முதல் அவர்களுக்கு இத்தடை நீங்கியது. இத்தடையை நீக்கி அவர்கட்கு அரசன் சார்பில் உரிமை அளித்தவர் நமது காலிங்கராயன் தான்!

பாண்டிய மன்னர்களின் பண்புடைத் தலைவராக விளங்கிய காலிங்கராயன் மக்கள் நலம் பேணி நாட்டு நலத்தின் பொருட்டு நல்லாட்சி நடத்திய நல்லமைச்சராக விளங்கி அழியாப் புகழ்பெற்று விளங்கினார்.

காலிங்கராய தெய்வம்

எல்லையில்லாப் பெரும் புகழுடன் பாண்டிய மன்னர் படைத் தலைவராகவும் அமைச்சராகவும் விளங்கி, உலகு போற்றும் உயர் பணிகள் பலவற்றைக் கொங்கு நாட்டினர் பொருட்டுச் செய்த நம் கொங்கு வேளாள சாத்தந்தை குலக்குரிசில் காலிங்கராயரைப் பிற்காலத்தில் தெய்வமாகவே கொங்கு நாட்டு மக்கள் வழிபட்டனர்.

காலிங்கராயன் அணையின் இடையில் உள்ள தீவில் அமைந்துள்ள தோப்பில் உத்தரராயன் கோயில் என்னும் பெயருடன் கோயில் ஒன்றுள்ளது.

வீரபாண்டியன் தன் நாட்டின் வடக்குப் பகுதியாகிய கொங்கு நாட்டிற்கு அரசனைப் போல் விளங்கிய அரசியல் அதிகாரியாகிய காலிங்கராயனுக்கு உத்தரராயன் என் பட்டப் பெயரை அளித்தார். உத்தரராயன் என்ற சிறப்புப் பெயரையுடைய காலிங்கராயனுக்கு முன்பு சிலை வடித்துப் பிரதிட்டை செய்து வணங்கினார்.

அக்கோயிலில் உள்ள வேறு ஒரு கடவுளுக்குப் பெத்தாரையன் என்று பெயர் கூறுகின்றனர். அது பெற்றாரையன் என்னும் சொல்லின் திரிபாக இருக்கலாம். அவர் காலிங்கராயனைப் பெற்றாரையனாக அதாவது காலிங்கராயனின் தந்தையாக இருக்க வேண்டும்.

வமிசாவளி பின்வருமாறு கோயில் கட்டிச் சிலையெடுத்து வழிபட்ட அச்செய்தியைக் குறிப்பிடுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணையிலே கவுண்டனையும் சர்ப்பத்தையும் சிலா பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சுச் சிலா சாசனமும்

எழுதியிருக்கிறது."

காலிங்கராயன் பரம்பரையில் வந்தவர்கள் மட்டுமல்ல, கொங்கு நாட்டு வேளாளர்கள் அனைவரும் காலிங்கராயனையும் வழிகாட்டிய பாம்பையும் தெய்வமாகவே வழிபட்டனர் என்பதை இந்தியாவின் ஆளுந்தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும் என்னும் ஆங்கில வரலாற்று நூல் கூறுகிறது.

"Stone statues of Kalingarayar and the serpent were placed near the anicut, and festivals and pujas were performed by his descendants and other ryots" என்பது அந்நூல் கூறும் பகுதியாகும்.

காலிங்கராயன் வாழ்ந்த காலத்தில் புலவர்கள் பலர் அவர் செய்த அரும்பெரும் செயலைப் பாடிப் புகழ்ந்திருக்க வேண்டும். அப்பாடல்களில் இப்பொழுது ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் காலிங்கராயன் காலத்திற்குப் பின்னர் அவர் செய்த பணிகளால் நாடு பல நற்பயன்கள் பெறுவதைக் கண்டு புலவர்கள் பலர் காலிங்கராயன் செயலைப் பாராட்டிப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர்.

கார்மேகக் கவிஞரின் பாடலில் காவிரியில் கலக்கும் பவானியில் அணைகட்டிப் பூக்கள் விரியும் புகழ்மிகு வயல்களுக்குப் பாய்ந்து நொய்யலில் கலக்கும் கால்வாய் வெட்டிய செயல் புகழப்படுகிறது.

"காவிரி யோடு கலக்குறு வானியைக் கட்டணைநீர்
பூவிரி செய்களுக் கூட்டிநற் காஞ்சி புகுதவிசை
தேவர்கள் சாம்பவர் பாவாணர்
எல்லாம் தினம்மகிழ
மாவிச யம்பெறு காலிங்க னும்
கொங்கு மண்டலமே!"

எனப்படும் பாடல் காலிங்கராயன் புகழினைக் கவினுறச் சுட்டுகின்றது.

காலிங்கராயன் திருச்செங்கோட்டுக்குச் செய்த திருப்பணியையும் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை கூறுகிறது. பசுவின் வடிவாகவும் இலிங்க வடிவும் கொண்டு விளங்கும் நாகமலை என்னும் திருச்செங்கோட்டில் குடிகொண்டுள்ள உமையொரு பாகனுக்குக் காலிங்கராயன் ஏழுமா நிலம் ஈந்தான்; அதனால் பெரும்புகழ் பெற்றான் என்று அந்நூல்

கூறுகிறது.

"ஆலிங்க நாகமலை அர்த்தநா ரீசுரர்க்குக்
காலிங்க ராயன்எனும் காராளன் – மாலிங்க
மொன்றேமா மாந்தை நிலமெழுமா
வுங்கொடுத்தான்
அன்றே புகழ்எய்தி னான்."

என்பது திருப்பணிமாலைச் செய்யுள் ஆகும்.

காவிரியோடு கலக்கும் பவானி ஆறானது இடையிலேயே மடங்கும் வண்ணம் வீர பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனின் அமைச்சராக விளங்கியவரும், கல்வியை நன்கு கற்றவருமான காலிங்கராயன் வெட்டிய கால்வாயின் கழிவுநீர் கூட வனத்தை நல்ல வயலாக்கும் தன்மையுடையது என்று பாடுகின்றார் அப்பாடலைப் பாடிய ஆசிரியர். இதோ அப்புகழ்மணம் கமழும் தனிப்பாடல்.

"எற்று திரைப்பொன்னி கூடுறு வானி இடைமடங்க
வெற்றி மிகுத்த அதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற அறிவினன் காலிங்க ராயன்செய்

உற்ற வனத்தை உறுவய லாக உயர்த்தியதே."

உலகில் மூன்று மிகப்பெரிய ஆற்றல்மிகு தீரச் செயல்கள் நிகழ்ந்துள்ளனவாம். முதலாவது சீதா பிராட்டியைச் சிறை மீட்கும் பொருட்டு இராமபிரான் இலங்கைக்குச் செல்லச் சேது அணை கட்டியது. இரண்டாவது காவிரியாறு பெருகி நாட்டை அழித்தபோது கரிகால் பெருவளத்தான் காவிரிக்குக் கரை எழுப்பியும் கல்லணை கட்டியும் நாட்டுக்கு நலன் விளைவித்த அரிய செயலாகும். அதனை ஒத்த மூன்றாவது பெரிய செயல் எது தெரியுமா? மலைகளையுடைய பூந்துறை எனப்படும் நல்ல நாடு வளம்பெற்று வாழும்பொருட்டுப் பவானி ஆற்றில் கரையிட்டு அடைத்துக் காலிங்கராயன் அணை கட்டியதாகும். இந்தப் போற்றுதற்கரிய செயலைச் செய்தவன் வெள்ளோடு சாத்தந்தை குலக் காலிங்கராயன் ஆவான் என்று கூறுகின்றார். சிறப்புமிகு இத்தனிப்பாடலைப் பாடிய ஆசிரியர்.

"திரைகொண்ட வாரியை மாலடைத்

தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன்மு னாளடைத்
தான்உலகு ஏழறிய
வரைகொண்ட பூந்துறை நன்னாடு
வாழஅவ் வானிதனைக்
கரைகொண்டடைத்தவன் வெள்ளோடைச்
சாத்தந்தை காலிங்கனே"

வெள்ளோட்டில் வாழ்ந்த பயிரகுலப் பெரியண்ண கவுண்டர் பற்றி சாமிநாதக் கவிராயர் பாடிய குறவஞ்சி இலக்கியத்தில் பவானியாற்றில் அணை கட்டி கரூர்வரை வாய்க்கால் வெட்டிய ஆற்றல் மிக்க பெரும் புகழுக்குரியவர் காலிங்கராயன் என்று கூறப்படுகிறது.

"அனதரு வான கனமா மேரு
திண்டிறல் வானியில் கண்டணை கட்டிக்
கருவூர் வரைக்கும் வரிசையாய் வாய்க்கால்
நடத்தும் உதாரன் படைக்குயர் தீரன்
தாலங்கள் புகழும் காலிங்க ராயன்"

என்பது குறவஞ்சி நூலின் பாடல் பகுதியாகும்.

காலிங்கராயன் கால்வாயின் அமைப்பு, அணையின் தன்மை, அதன் பொறியியல் திறன், சிறப்புத் தன்மை, அதன் பெருமை, வரலாற்றுத் தொன்மை ஆகியவை வெளிநாட்டார் பலரை மிகவும் கவர்ந்துள்ளது. கி.பி.18, 19ஆம் நூற்றாண்டில் கொங்குப் பகுதிக்கு வந்த பல வெளிநாட்டினரும், அரசியல் அலுவலர்களும், பொறியியல் நிபுணர்களும், ஆட்சித் தலைவர்களும் காலிங்கராயன் கால்வாய் குறித்து முக்கியத் தகவல்களை எழுதி வைத்துள்ளனர்.

சுவார்ட்சு

புக்கானன்

மெக்கென்சி

ரெளட்டன்

ஹன்னான்

வெட்டர்பர்ன்

அருண்டேல்

மாண்ட் கோமரி

மீடு பென்னி குக் (முல்லைப் பெரியாறு அணை கட்டியவர்)

அட்ரி

மார்கன்

சர் ஆர்தர் காட்டன்

போன்ற பலரின் பயனுடைய குறிப்புகள் பழைய வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதுடன் எதிர்காலப் பாசனத்திட்டங்களுக்கும் இன்றியமையாத பல சிறந்த கருத்துக்களைத் தருகின்றன.

டாக்டர் புக்கானன், "பவானியிலிருந்து புறப்பட்டு ஈரோட்டுக்குப் பக்கத்தில் ஓடுகிற கால்வாய் ஒரு சிறந்த வேலைப்பாடுள்ள கால்வாய். இது ஒரு அருமையான வேலைப்பாடாக அமைந்துள்ளது. இக்கால்வாய்ப்பணி முழுவதும் காலிங்கராய வேளாளர் என்பவரால் செய்யப்பட்டது. அவர் ஒரு செல்வராகவும் செல்வாக்குப் பெற்றவராகவும் இருந்த காரணத்தால் மக்களிடம் இருந்து கால்வாயின் தேவைக்கான பணத்தைத் திரட்டினார்" என்று கூறுகிறார்.

ஹன்னான், "கால்வாய் முழுவதிலும் நேரடியாகவே வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச வசதியாகப் பல மதகுகள் இருக்கின்றன. இந்த

மதகுகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் சிறு கிளைக் கால்வாய்களை அமைத்து நீர் பாய்ச்சினால் இன்னும் ஏராளமான நிலங்கட்கு நீர் பாய்ச்ச முடியும். கொங்கு நாட்டின் முதல் தரமான கால்வாய் ஆகிய இதன் கரையின் எல்லா இடங்களும் சோழ நாட்டைப் போன்ற மிக வளம் பொருந்தியதாகக் காணப்படுகின்றன." என்கிறார்.

சேரமான் பெருமாள் காலத்தில் காவடிக்கா நாட்டுப் பகுதியில் காலிங்கராயன் குடும்பத்தினருக்குக் கொடையாகப் பூமி அளிக்கப்பட்டிருந்தது. அந்நிலத்தில் மாட்டுப் பண்ணை இருந்தது. ஏராளமான மாடுகள் அங்கு இருந்தன. மாடுகள் தண்ணீர் குடிக்க ஊற்றுக் குழிகள் தோண்டியிருந்தனர். அப்பகுதிக்கே காலிங்கராயன் குடும்பத்தினர் குடியேறினர்.

தன்னுடன் வந்த பங்காளிகள் பலருடன் ஊற்றுக் குழிப் பகுதியில் குடியேறி ஆலயம் கட்டி அரண்மனை அமைத்துப் பண்டைய அரசர்போல் காடு கொன்று நாடாக்கிக் குளம் தோண்டி வளம் பெருக்கி நல்லாட்சி

புரிந்து நாடு காத்தனர். காலிங்கராயன் மரபினர் அகத்தூர் அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டனர்.

வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்கள் காலத்தில் அவர்கள் அலுவலராகிய காலிங்கராயர் பரம்பரைக்கு நல்ல மதிப்பு இருந்தது. பாண்டியர் ஆட்சி மறைந்து ஒய்சளர் ஆட்சி கொங்குப் பகுதியில் ஏற்பட்ட பின் காலிங்கராயன் குடும்பத்திற்கு ஏனைய பட்டக்காரர், பாளையக்காரர்கள் தங்களுக்கு அளிக்கும் மதிப்புக்களையும் மரியாதைகளையும் பரம்பரைப் பாளையக்காரர் அல்லாத காலிங்கராயர் குடும்பத்திற்கு அளிக்கக்கூடாது என்று கூறினர்.

இதைக் கண்டு மனம் பொறுக்காத காலிங்கராயர் பரம்பரையினர் காவடிக்கா நாட்டுப் பகுதிக்குச் சென்று விட்டனர்.

காலிங்கராயன் காலத்தில் கால்வாய்ப் பராமரிப்புக்குக் கொங்கு நாட்டில் காலிங்கராய வினியோகம் என்ற வரி வசூலிக்கப்பட்டது. சோழ

நாட்டில் இதுபோன்று காவிரிக்கரை வினியோகம் என்ற வரி வாங்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஆங்காங்கு இருக்கும் ஊர்ச்சபைகள் கால்வாய்க் கரைகளின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் கவனித்துக் கொண்டன. அந்தந்தப் பகுதி விவசாயிகளே தங்கள் பகுதிக் கால்வாயைக் கண்காணித்துக் கொள்ளும் குடி மராமத்து முறையும் சில காலங்களில் இருந்தது. பரம்பரைத் தொழிலாளர் பணியமர்ந்து கால்வாயைக் கண்காணிக்கும் வழக்கமும் இருந்தது.

கால்வாய் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்காகவும் கால்வாய்ப் பராமரிப்புக்கும் பழங்காலத்தில் நெல்லாகத் தீர்வை வசூல் செய்யப்பட்டது. நெல்லாக அளிப்பதில் பல குறைகளும் சமச்சீரின்மையும் காணப்படவே தீர்வை காசாக நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டது.

சுமார் 190 ஆண்டுகட்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தில் கால்வாய் பொதுப்

பணித்துறை நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இன்று வரை அணையையும் கால்வாயையும் பொதுப் பணித்துறையே நன்கு கவனித்து வருகிறது. பொதுப்பணித்துறை நிருவாகத்தின் கீழ் அணையும் கால்வாயும் வந்ததும் 1832இல் பல பகுதிகளில் பெரிய அளவில் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1868, 1891, 1936, 1954, 1962, 1974 ஆகிய ஆண்டுகளில் பெரிய அளவில் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 16ஆம் தேதி மாலை 6 மணிக்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் அனுமதிக்கப்பட்டு ஏப்ரல் 30ஆம் தேதி மாலை 6 மணி வரை பத்தரை மாதங்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்க வேண்டும். மிகத் தொன்மையான இப்பவானியாற்று அணை மூலம் 16 மைலிலிருந்து 561/2 மைல் வரை முப்போகத்திற்குக் காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீர் பெறுவது காலிங்கராயன் கால்வாய்ப் பகுதி உழவர்களின் அடிப்படைப் பூர்வீக

உரிமையாகும். இது 2.11.1966 அன்று பொதுப்பணித்துறை வெளியிட்ட 2647 ஆம் எண் அரசு ஆணையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 101/2 மாதம் தண்ணீர் விடுவதை 9 மாதமாகக் குறைத்துப் பாசனத்தை இருபோக மாக்கித் தாராளமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் விட வேண்டும் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

கால்வாயில் ஆங்காங்கே சிறு ஓடைகள் மூலம் வெள்ள நீர் வந்து சேர்கிறது. அந்த நீரால் வாய்க்காலின் முழு அளவு நீர்மட்டம் உயர்ந்து கரைக்கு ஆபத்து உண்டாகும் நிலையில் இருந்தால் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள தாம்பாங்கிகள் எனப்படும் மணற்போக்கிகளின் மூலமாகப் போதிய அளவிற்குத் தண்ணீர் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டுக் கரை பாதுகாக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டதும் முக்கியமான இடங்களில் தேவையான பழுது பார்க்கப்படுகின்றன. அதற்காகத்தான் குறைந்தது 45 நாட்களாவது

தண்ணீர் நிறுத்தப்படும். பொதுப்பணித்துறை பல சீரமைப்புக்களைச் செய்துள்ளது. இப்பணிகளால் வீணாகும் தண்ணீர் சேமிக்கப்பட்டுப் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்க ஏதுவாகிறது. மண் அரிப்பைத் தடுத்து நிறுத்தி வேண்டிய தண்ணீரை நிறுத்தச் செய்து தேவைக்கு ஏற்பச் சமமான தண்ணீரைப் பங்கீடு செய்வதற்கு வழிவகைகள் அமைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழகத்தில் மிகச்சிறப்புடன் நிர்வகிக்கப்பட்டு வரும் கால்வாய்களில் தலை சிறந்தது காலிங்கராயன் கால்வாயே ஆகும்.

"காடெல்லாம் சிறு செந்நெல் விளையும்" என்று இலக்கியம் எடுத்துரைத்ததற்கு ஏற்பக் காலிங்கராயன் கால்வாயால் சிறப்பு மிக்க நீர்வளம் ஏற்பட்டு நிலவளம் பெருகி நன்செய் விளைவு ஏற்பட்டுள்ளது எல்லோரும் அறியும் உண்மையாகும்.

"காலிங்கராயன் கடாட்சத்து னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியானவர்கள்"

என்று ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு கூறுவதற்கு ஏற்பக் காலிங்கராயனால் ஏற்பட்ட நன்மைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

கரையில் கீழ்வரும் ஊர்கள் அமைந்துள்ளன. அடைப்புக்குறிக்குள் இருப்பது கால்வாய் மைல் ஆகும்.

அணை நாகுவம்பாளையம் (0/0)

இராமநாதபுரம் (4.2½)

பெரிய அக்கிரகாரம் (7.1½)

ஈரோடு (14.0)

சாத்தனூர் (20.00)

சாவடிப்பாளையம் (24.0)

காளமங்கலம் (27.2)

பாசூர் (31.1½)

பழனிக்கவுண்டம்பாளையம் (32.4)

வட்டக்கல் வலசு (34.4)

மலையம்பாளையம் (35.2½)

கொளாநல்லி (37.4)

குட்டப்பாளையம் (38.0½)

காரணம்பாளையம் (40.4½)

அமராவதி புதூர் (41.4)

கருக்கம்பாளையம் (42.0)

ஊஞ்சலூர் (43.2½)

கொளத்துப்பாளையம் (44.4)

பனப்பாளையம் (45.6)

கல்வெட்டுப்பாளையம் (47.4)

வெங்கம்பூர் (48.2)

வடக்குப் புதுப்பாளையம் (50.0)

கணபதி பாளையம் (51.3½)

கொடுமுடி (53.7½)

வருந்தியா பாளையம் (54.2)

சோழக்காளி பாளையம் (55.2½)

இவைகள் இல்லாமல் இவைகளின் அருகில் இன்னும் பல ஊர்கள் நெருக்கமாக ஏற்பட்டுள்ளன. இவ்வாறு பல ஊர்கள் மிக நெருக்கமாக ஏற்படக் காரணம் காலிங்கராயன் கால்வாயே ஆகும்.

சூரியம்பாளையம், தளவாய்பாளையம், வைராபாளையம், கருங்கல்பாளையம், வெண்டிபாளையம், காங்கயம்பாளையம், குறுக்கபாளையம், செட்டிலிபாளையம், வேலம்பாளையம், மன்னாதம்பாளையம், பாம்பகவுண்டம்பாளையம், கோம்புப்பாளையம், காரநாயக்கன்பாளையம், வள்ளிபாளையம், பனைப்பாளையம், காசிபாளையம், கணபதிபாளையம், அரசம்பாளையம், நாகமநாயக்கன் பாளையம் ஆகியவைகளும் பிற பாளையங்களும் நாயக்கர் ஆட்சியில் ஏற்பட்டனவாகும்.

கால்வாய் வளம் ஏற்பட்டவுடன் சில ஊர்கள் நஞ்சை, புஞ்சை என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. நஞ்சை லக்காபுரம, புஞ்சை லக்காபுரம், நஞ்சை காளமங்கலம், புஞ்சைக் காளமங்கலம், நஞ்சைக் கொளாநல்லி, புஞ்சைக் கொளாநல்லி என அவை அழைக்கப்பட்டன.

வயல்வெளியில் நெற்போர் அடிக்கக் களங்கள் அமைக்கப் பட்டு அதன் அருகில் வீடுகள் அமைக்கப்பட்டுச் சில சிற்றூர்கள் அதனால் களம்

என்றே அழைக்கப்பட்டன. இலட்சுமண கவுண்டன் களம், ஆலைக்காட்டுக்களம், கம்பங்காட்டுக்களம் என்பன அவ்வாறு அமைந்த ஊர்களாகும்.

புதுப்பாளையம், அணைக்கட்டுப்புதூர், வடக்குப் புதுப்பாளையம், தெற்குப் புதுப்பாளையம், மிளகாய்ப் புதுப்பாளையம், சேட்டையூர் புதூர், சாத்தம் புதூர், இராயபாளையம் புதூர், இராமநாதபுரம் புதூர், புத்தூர், ஆட்டுக்கவுண்டன் புதூர், குள்ளக்கவுண்டன் புதூர், முத்துக்கவுண்டன் புதூர், சாவடிபாளையம் புதூர், அமராவதி புதூர், பொறையம்பாளையம் புதூர் என்பன புதியவனாக ஏற்பட்ட ஊர்களாகும்.

கால்வாய்க் கரையில் உள்ள ஊர்கள் மிகுதியான செல்வவளம் பெற்றன. பொருளாதாரப் புழக்கம் மிகுதியாக ஏற்பட்டது. ஈரோட்டில் தென்னகத்திலேயே மஞ்சள் வணிகம் சிறந்து விளங்குவதற்குக் காலிங்கராயன் கால்வாய் முக்கியக் காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

10.11.1800இல் கொடுமுடிக்குப் பகுதிக்கு வருகை புரிந்த புக்கானன் இந்தியாவிலேயே நான் பார்த்த

இடங்களில் இப்பகுதி மிகவும் அழகு வாய்ந்தது என்று பாராட்டும் அளவுக்கு இப்பகுதியை வளமாக மாற்றியது காலிங்கராயன் கால்வாயே ஆகும்.

பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை வளப்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களை வளத்துடன் வாழச் செய்யும் புனிதன் புகழோன் காலிங்கராயன் கட்டிய அணையும் வெட்டிய கால்வாயும் என்றும் வளம் பெருக்கி அன்னையைப்போல் அணைத்தூட்டி வாழவைப்பதாகுக!

வாழ்க காலிங்கராயன் புகழ்!

அணை, வாய்க்கால் பணிகள் நிறைவுற்றபின் வெள்ளோட்டிலிருந்து நெடுந்தொலைவு உள்ள பொள்ளாச்சி ஊத்துக்குளிக்குச் சென்று காலிங்கராயன் வழியினர் அங்கு பாளையக்காரராகி நாடாளும் அரசர்கட்கு உற்றுழி உதவிப் பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றனர். அவர்களால் ஊத்துக்குளி ஜமீன் ஊத்துக்குளி என்று பெயர் பெற்றது.

காலிங்கராயன் கட்டிய அணை மற்றும் வெட்டிய

கால்வாயின் பயனை பின்வரும் தன் சந்ததியார்கள் எவரும் பயன்படுத்தக் கூடாது என்று எழுதி வைத்துள்ளார்.

தை 5 காலிங்கராயன் நாள், வாய்க்கால் மூலம் வரலாறு படைத்த மாவீரன் காலிங்கராயன் புகழ்பாடுவோம்.

அன்று அணை, கால்வாயில் பூச்சொரிந்தும், முளைப்பாரிவிட்டும் புகழ்பாடுவோம்.

தமிழக அரசு காலிங்கராயன் அணையில் காலிங்கராயன் திருவுருவச் சிலையும், மண்டபமும் அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழக அரசுக்கு நன்றி.

வாழ்க காலிங்கராயன் புகழ்!

முதல் பதிப்பு

மன்மத வருடம் தை மாதம் 5ம் தேதி
(19.01.2016) செவ்வாய்க்கிழமையன்று
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தாலுகா
பஞ்சலிங்கபுரத்தில் காலிங்கராயன் வாய்க்கால்
கரையில் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது

அணைக்குக்கல் கொடுத்த ஊராட்சிக்கோட்டை மலை



காலிங்கராயன் அணை

காலிங்கராயன் வாய்க்கால்



அணை நீர் வெளிவரும் மதகுகள்

காலிங்கராயனின் குலத்தெய்வமான வெள்ளோடு
அருள்மிகு இராசாசுவாமி கோயில்
அமையவிருக்கும் முகப்புத்தோற்றம்



அணை விபரம்

தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை
காளிங்கராயன் அணைக்கட்டு
ஆற்றின் நீளம் : 104 மைல்
ஆற்றின் வடிநீர் பரப்பு மலைசரிவு : 640 ச.மைல்
சம தரையில் : 1736 ச.மைல்
அதிகபட்சம் ஆற்றின் வெள்ளம் 1,26,771 கனஅடி வினாடிக்கு 9-12-1972
முரியன் அணைக்கட்டு 1350 அடி 542-90'
மைய அணைக்கட்டு 854 அடி 544-13'
பிரதான அணைக்கட்டு 757 அடி 541-10'

இந்தியா மற்றும் உலக சுற்றுலாக்களுக்கு அணுகவும்
மனோகர் டிராவல்ஸ்
2/176, பெரியண்ண வீதி, கலைமகள் ஆரம்பப்பள்ளி ரோடு,
ஈரோடு-638001. செல் : 94433-80159
11, வீராசாமி வீதி, பெரியமேட், சென்னை-600003.
செல் : 96881 81383
e-mail : manohartravvels@gmail.com
www.manohartravels.com
கும்பாபிஷேக வர்ணனை
பட்டிமன்றம், வழக்காடு மன்றம்
இன்னிசைப்பாட்டு பட்டிமன்றம்
ஆன்மீக இசை சொற்பொழிவு
பக்தி பாடல் இசை நிகழ்ச்சிகளுக்கு அணுகவும்
கயிலைச்சித்தர் மனோகர்
மனோகர் டிராவல்ஸ்
2/176, பெரியண்ணன் வீதி,
ஈரோடு-1. செல் : 96881 81383
வாழ்க்கையில் வளம் பெற யாகங்கள் செய்ய வேண்டும்
தொழில் அபிவிருத்திக்கு : ஸ்ரீ மஹா கணபதி மஹா யாகம்
செல்வம் செழிக்க : ஸ்ரீ குபேர தனாகர்ஷண மஹாலஷ்மி யாகம்
திருமணம் கைகூடிவர : ஸ்ரீ சுயம்வரகலா பார்வதி பரமேஸ்வர யாகம்
குழந்தை பாக்கியம் கிடைக்க : ஸ்ரீ சந்தான பரமேஸ்வர மஹா யாகம்
அனைத்து வகையான யாகங்கள் உங்கள் ஊரில் / உங்கள் இல்லத்தில் செய்வதற்கு அணுகவும்
கயிலை நந்திபீடம்
செல் : 88834 77661
2/176, பெரியண்ணன் வீதி,
மனோகர் டிராவல்ஸ் வளாகம்,
ஈரோடு-638001.